செ.வெ.எண்:26/2017 நாள்:15.08.2017

**சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து 59 பயனாளிகளுக்கு ரூ.8,07,516 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**







சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக மைதானத்தில் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.08.2017) தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுதந்திரப் போராட்ட தியாகிகளை கௌரவிக்கும் வகையில் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.75,000/- மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.42,350/- மதிப்பிலும், வருவாய்த்துறை சமூக பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.2,40,000/- மதிப்பிலும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.1,20,000/- மதிப்பிலும், சமூகநலத் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.2,50,000/- மதிப்பிலும், வேளாண்மைத்துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.80,166/- மதிப்பிலும் ஆக மொத்தம் 59 பயனாளிகளுக்கு ரூ.8,07,516/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் திருப்பத்தூர் நா.ம.அரசு (ம) மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, கல்லல் சாந்திராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை ஆக்ஸ்போர்டு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஜஸ்டின் மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் யோகாசன சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டி.ஜெயச்சந்திரன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சுப்பையா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.